**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.102/2024**
**வழக்கு சாட்சி LW 13 (PW –8)**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.கொளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு,R.பாலமுருகன் | தொழில் | : காவல் ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : ராஜேந்திரன் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : | வயது | : சுமார் 53 |
| தாலுக்கா | : கோயமுத்தூர் | நாள் | : 17.03.2026 |
| மாவட்டம் | : கோயமுத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது கோயமுத்தூர் மாநகர மத்திய குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன், நான் திண்டுக்கல் மாவட்டம், பழனி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, கடந்த 09.11.2016ம் தேதி மதுவிலக்கு குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக இருந்த போது, 18.00 (மாலை 06.00) மணிக்கு மதுவிலக்கு ரோத்து சம்மந்தமாக காவலர்கள் லோகநாதன், பிரபாகரன் ஆகியோர்களுடன் அம்பிளிக்கை பகுதியில் கண்காணித்து வரும்பாது கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் ராயக்கவுண்டன் பிரிவில் உள்ள பழனிச்சாமி என்பவரின் தோட்டத்தில் சாராயம் காச்சுவதாக வந்த தகவலின் அடிப்படையில் சம்மந்தப்பட காப்பிலியப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் வினோத்குமார், அவரது உததியாளர் ராஜா ஆகியோர்களுடன் பழனிச்சாமி என்பவரின் தோட்டத்திற்கு சென்றபோது, போலீஸ் பார்டியை பார்த்ததும், பழனிச்சாமி என்பவரின் மகன் ஆஜர் எதிரி தியகராஜன் எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சி மேற்கொண்டார் உடனடியாக அவரை பிடித்து விசாரணை மேற்கொண்ட போது சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர் வினோத்குமார் அவரது உதவியாளர் ராஜா முன்னிலையில் விசாரித்தேன், தோட்டத்துச்சாலையில் காச்சி

விற்பனைக்காக வைத்திருந்த ஐந்த லிட்டர் சாராயத்துடன் கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் இருந்த சாராயத்தினை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார். அவர் ஒப்புக்கொண்டபோது நேரம் இரவு (06.00) 18.00 ஆகும், உடனே ஒப்புதல் வாக்குமூலம் அதே சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காச்சி வைத்திருந்த ஐந்து லிட்டர் சாராயத்துடன் கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனையும் எடுத்து ஆஜர் செய்தார். அப்போது தோட்டத்துச்சாலைக்கு முன்பு மண்ணுக்குள் பொதைத்து வைத்திருந்த சாராயத்தை கைப்பற்றினோம். அவ்வாறு கைப்பற்றிய போது மொத்தமாக சேர்த்து விற்பனை செய்தால் அதிகமாக பணம் கிடைக்கும் என்று ஆஜர் எதிரி கூறினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.1 வழியாக ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பயிடத்தில் இருந்த கள்ளச்சாராய ஊரலை கைப்பற்றி அந்த இடத்திலே கொட்டி அழித்தும், மண்பானைகளை உடைத்தும் சாட்சிகள் முன்னிலையில் அழிக்கப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.7 ஆகும். சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர் வினோத்குமார் மற்றும் உதவியாளர் ராஜா ஆகியோரிடம் சம்பவயிடத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி மற்றும் கைப்பற்றிய பொருட்களுடன் மதுவிலக்கு காவல் நிலைய குற்ற எண் .833/2016 என்ற பிரிவில் தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்கத் தடுப்புச்சட்டம் பிரிவுகள். 4(1) (b), 4(1)(g), 4(1)(a), 4(1–A) ஆகிய பிரிவுகளின் முதல் தகவல் அறிக்கை தயார்செய்தேன், அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகும். அதன் பின்பு நிலையத்தில் சாட்சிகள் கிருஷ்ணன், முத்துக்கவுண்டர், தலைமை காவலர் லோகநாதன். தலைமை காவலர் பிரபாகரன் ஆகியோர்களுடன் வாக்குமூலம் பதிவு செய்தேன். காவல் நிலையத்தில் வைத்து படிவம் 91 தயார்செய்தேன், அந்த படிவம் அ.த.சா.ஆ.9 பின்பு 10.11.2016ம் தேதி காலை 07.00 சம்பவயிடமான அம்பிளிக்கை ராயக்கவுண்டன் புதூர் பழனிச்சாமி தோட்டத்தில் மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தோன். அப்போது அங்கிருந்த சாட்சிகள் தங்கவேல் மற்றும் வேலுசாமி ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.11.2016ம்

தேதியிட்ட பார்வை மகஜர் அ.த.சா.ஆ.10 மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.11. பின்பு அன்றைய தினம் 13.15 மணிக்கு எதிரி மற்றும் கைப்பற்றிய பொருட்களுடன் கு.வி.மு.ச பிரிவு 57 மற்றும் 167 ஆக்கக்கூறுகளை பின்பற்றவேண்டி நீதித்துறை நடுவரிடம் எதிரியை ஆஜர் படுத்தினேன். 14.11.2016ம் தேதி கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராயத்தை ரசாயன பரிசோதைக்காக நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன், அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.12. நீதிமன்றத்தில் இருந்து ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவான பிறகு தலைமை காவலர் மகாலிங்கம் என்பவர் வழியாக மதுரை வட்டார அறிவியல் ஆய்வகம், துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது, கடந்த 17.11.2016ம் தேதி அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பகுப்பாய்வு கிடைக்கப்பெற்றது, அந்த பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.13. பகுப்பாய்வு அறிக்கையில் அட்ரோபின் கலந்த சாராயம் என்று அறிக்கை கிடைக்கப்பெற்றது. அதன் பின்வு 18.11.2016ம் தேதி அறிக்கை வழங்கிய துணை இயக்குநர் ஹமீதா போகம் அவர்களிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னிட்டு அட்ரோபின் கலந்த சாராயத்தை ஒரு நபர் அருந்தும் போது என்ன பின்விளைவுகள் ஏற்படும் என்பதை தெரிந்துகொள்வதற்காகவும், வழக்கை மேல்நடத்த வேண்டி திண்டுக்கல் தலைமை அரசு மருத்துவமனை மருத்துவர் மகாலட்சுமி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன், அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.14. பின்பு மருத்துவர் மகாலட்சுமி என்பவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்தேன் மருத்துவர் மேற்படி தனது கருத்துக்களை அறிக்கையாக சமர்பித்தார் அந்த அறிக்கையை 19.11.2016 பெற்றேன். அந்த அறிக்கை அ.த.சா.ஆ.15. பின்னிட்டு எனது புலன்விசாரணை 24.03.2017ம் தேதி இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை:-**

இவ்வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் வினோத்குமார், கிராம நிர்வாக உதவியாளர் ராஜா, என்னோடு பணிபுரிந்து வந்த மதுவிலக்கு அமலாக்கப்புரிவு சக காவலர்கள் புகார் ஏதும் இந்த வழக்கு சம்மந்தமாக கொடுக்கவில்லை என்றால் ? சரிதான். மேற்படி நபர்களை புகார் கொடுக்கச் சொல்லி அறிவுறுத்தவில்லை என்றால் ?

இல்லை. மேற்படி நபர்கள் சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு வரதகாரணத்தினால் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் ? சரியல்ல. இவ்வழக்கில் நான் தான் புகார்தாரர் என்றால் ? சரிதான். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் நான் தான் என்றால் ? சரிதான். புகார்தாரரரே புலன் விசாரணை அதிகாரியாக இருக்கக்கூடாது என்ற விதி இருக்கிறது என்றால் ? சரியல்ல, மதுவிலக்கு அமலாக்கத்துறை என்பதால் நானே விசாரித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். எத்தனை மணிக்கு சம்பவம் நடைபெற்றது என்றும், எத்தனை மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 அகியோர்கள் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. அ.சா.1 வினோத்குமார் என்பவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் பழனிச்சாமி தோட்டத்திற்கு சென்றாதக வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் ? சரிதான். கிராம நிர்வாக அலுவலர் பழனிச்சாமி தோட்டத்தில் இருந்துள்ள நிலையில் மேற்படி சம்பவயிடமானது பழனிச்சாமியின் தோட்டம் என்பதை நிறுபிக்கும் வகையில் வருவாய் துறை ஆவணங்களை நான் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் ? நான் முன்னிலைப்படுத்தவில்லை. இறுதியறிக்கையில் பழனிச்சாமி என்பவரின் தோட்டம் என்று சொல்லாமல், எதிரி தியாகராஜன் என்பவரின் தோட்டம் என்று சொல்லியுள்ளேன் என்றால், தியாகராஜன் என்பவரின் தகப்பனார் தான் பழனிச்சாமி. நான் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜரில் ஆஸ்பெட்டாஸ் சாலையில் தான் வழக்கு சொத்துக்கள் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைப்படத்தில் ஆஸ்பெட்டாஸ் சாலை இருப்பதாக செல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாட்சிகள் முன்னிலையில் பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும், முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் ? சரியல்ல. மருத்துவர் சாட்சி மகாலட்சுமி அவர்களிடம் அறிக்கையைப் பெற்றுதான் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் ? சரிதான். அந்த அறிக்கையானது 19.11.2016ம் தேதி தான் பெற்றுள்ளேன் என்றால் ? சரிதான். இவ்வழக்கின் புலன் விசாரணையை வழக்கு பதிவு செய்த பத்து நாட்களுக்குள் முடித்துவிட்டேன் என்றால் ? சரிதான், இறுதியறிக்கை நான்கு

மாதங்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன், என்றால்? புலன் விசாரணை நிறைவு பெறாமல் இருந்ததால் இறுதியறிக்கை 24.03.2017ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. பகுப்பாய்வு ரசாயன அறிக்கைப் பெறப்பட்ட பிறகுதான் அட்ரோபின் கலந்த சாராயம் என்று தெரியவந்தது என்றால் ? சரிதான். அட்ரோபின் கலந்த சாராயத்தை அருந்தினால் மனித உடலுக்கு ஏற்படும் விளைவுகள் பற்றி அறிக்கைப் பெறப்பட்டது என்றால் ? சரிதான். குற்றம் சாட்டப்பட்டவரை காவல் நிலையத்திற்கு அழைத்துவந்தவுடன் விசநெடியுடன் கூடிய சாராயமா என தெரிந்துகொண்டேனா என்றால் ? இல்லை. எதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையில் தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு 4(1–A) என்ற சட்டப்பிரிவு போட்டேன் என்றால் ? விஷநெடியுடன் கூடிய விஷவாடை அடித்ததால் மேற்படி பிரிவை முதல் தகவல் அறிக்கையின் போது பயன்படுத்தினேன். சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளமல், தவறான தகவலை தாங்கிய இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும், வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் ? சரியல்ல.

Takendown by me in opencourt and
Readover by me and acknowledged
by him/her to be correct.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.17 19:20:45 +0530

Assistant Sessions Judge,
Oddanchatram